தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
TAMIL NADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Website: www.tnteu.ac.in Ph. No. 28389045/93

No. TNTEU/COE/ 889 Date: 21.07.2026

***Prof.M.Kanmani***
***Controller of Examinations i/c***

***சுற்றறிக்கை***

அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய கல்வியியல் கல்லூரி தாளாளர் பெருமக்களுக்கு

**வரப்புயர நீர் உயரும்**
**நீர் உயர நெல் உயரும்**
**நெல் உயர குடி உயரும்**
**குடி உயர கோல் உயரும்**
**கோல் உயரக் கோன் உயர்வான்**

என்ற **ஔவையின்** வாக்கிற்கிணங்க தங்கள் கல்லூரியில் பயிலும் மாணவர்களை மேம்படுத்திட, தங்களை மேம்படுத்தி அனுதினமும் தங்களின் பணிகளை அர்ப்பணிக்க உதவும் பேராசிரியர்களுக்கும் முதல்வர்களுக்கும், அதன் மூலம் கல்லூரியை மேண்மையடையச் செய்து இப்பல்கலைக்கழகத்தின் கீழ் பயிலும் மாணவர்களுக்கான ஜீலை 2026 பருவத்தேர்வினை சீரிய மற்றும் சிறந்த முறையில் நடத்தி முடிக்க அனைத்து வழிகளிலும் தங்களின் உதவிகளை நல்கி, குறிப்பாக இப்பல்கலைக்கழகப் பருவத்தேர்வு சம்பந்தப்பட்ட செயல்களில் ஈடுபட கல்லூரிகளின் பேராசிரியர்களுக்கு அனுமதியளித்து தங்களின் பணியினை செவ்வனே செய்ய, பேருதவி அளித்த அனைத்து தாளாளர்களுக்கும் பல்கலைக்கழகத்தின் சார்பில் அன்புகலந்த நன்றியினை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக பல்கலைக்கழகத்தால் ஏதேனும் சிறு, குறு தாமதங்கள் மற்றும் தவறுகள் ஏற்பட்டிருந்த போதிலும் அதனைப் பொருத்துக்கொண்ட அணைத்து அன்புள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்வரும் காலங்களில் இன்னும் சிறப்பாகவும் உரிய நேரத்திலும் தேர்வுகளை செவ்வனே நடத்தி தேர்வு முடிவுகளை வெளியிட உதவிகளை நல்குவீர்கள் என்ற நம்பிக்கையில்

**உங்களின்**

21/7/26

(தேர்வாணையர்)